# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~
Under Section 173 BNSS

C 8102138

1. District : மாவட்டம் திண்டுக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு. Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 05/24 Date: நாள் 04-09-24

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act -1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(b) and 12

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 16.08.2024

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 17.08.2024

22.08.2024

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04-09.2024 Time : நேரம் 27.08-2024

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.00 hrs. Time : நேரம் 03.09.2024

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் குஜிலியம்பாறை தாலுகா அலுவலகம், சர்வே பிரிவு சுமார் 45 கி.மீ வடகிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. சரண்யா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.அர்ச்சுனராஜா

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 24 (d) Nationality : நாட்டினம் இந்தியன். (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி கண்ணுமேய்க்கிப்பட்டி, கரிக்காலி கிராமம், குஜிலியம்பாறை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1, திரு. பாரதிதாசன், சர்வேயர், கரிக்காலி கிராமம், குஜிலியம்பாறை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம், 2. திருமதி. சுதா, உதவியாளர் கரிக்காலி கிராமநிர்வாக அலுவலகம், குஜிலியம்பாறை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரனை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ....................... Rank ....................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Griya

U. [signature] 04/09/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.09.2024 at 15.30 hrs.

Name: பெயர் உ. பழனிச்சாமி
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
மா.கு.க பிரிவு
திண்டுக்கல்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**<u>திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:5/2024 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-</u>**

<u>Column No.12, FIR Contents</u> **பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 04.09.2024-ம் தேதி காலை 10.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை தாலுகா, கரிக்காலி கிராமம், கண்ணுமேய்க்கிப்பட்டி,. அர்ச்சுனராஜா அவர்களின் மனைவி திருமதி.K.சரண்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 04.09.2024-ம் தேதி மதியம் 12.30 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: K.சரண்யா, க/பெ .அர்ச்சுன ராஜா, கண்ணுமேய்க்கிப்பட்டி, கரிக்காலி கிராமம், குஜிலியம்பாறை தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். பெறுநர். உயர்திரு.DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் குஜிலியம்பாறை தாலுகா, கரிக்காலி கிராமம், கண்ணிமேய்கிப்பட்டியில் எனது கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். எனது அப்பா திரு.கள்ளைய கோனார் மற்றும் சித்தப்பா திரு.துரைச்சாமி ஆகியோர் கடந்த 05.02.2016ம் தேதி கரிக்காலி கிராமம் சர்வே எண்.142/2ல் உள்ளடங்கிய 1 ஏக்கர் 58 செண்ட் நிலத்தை சரிபாதியாக பிரித்து தலா 79 செண்ட் வீதம் கிரையமாக வாங்கி அதனை குஜீலியம்பாறை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்கள். 187/2016 மற்றும் 188/2016 ன் படி பதிவு செய்தனர். எனது அப்பா திரு.கள்ளைய கோனார் மற்றும் எனது சித்தப்பா திரு.துரைச்சாமி ஆகியோர்களுக்கு எழுதப் படிக்க தெரியாததால் மேற்படி நிலத்திற்கு பட்டா மாறுதல் எதுவும் செய்யவில்லை. எனவே நான் மேற்படி நிலத்தினை உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்வதற்காக கடந்த 24.07.2024-ம் தேதி குஜிலியம்பாறை கடை வீதியில் உள்ள தீபம் இ-சேவை மையத்தில் எனது மொபைல் எண்.8438881768-யை கொடுத்து இரண்டு பேரின் பெயரிலும் தனித் தனியாக பட்டா மாறுதல் செய்ய விண்ணப்பித்தேன். அதன் பின்பு கடந்த 16.08.2024ம் தேதி கரிக்காலி சர்வேயர் திரு.பாரதிதாசன், சர்வேயரின் உதவியாளர் திரு.யுவா மற்றும் கரிக்காலி கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் திருமதி.சுதா ஆகியோர் எங்களது நிலத்தினை அளவீடு செய்ய வந்தனர். அப்போது எங்களது தோட்டத்தில் எனது அப்பா, அம்மா மற்றும் எனது சித்தி திருமதி.முத்துலெட்சுமி ஆகியோர் இருந்தனர். அப்போது சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்கள் கரிக்காலி கிராமம், L.புதுாரைச் சேர்ந்த திரு.கருப்பணன் மகன் திரு.வெள்ளைச்சாமி மற்றும் திரு.ராமகிருஷ்ண கோனார் மகன் திரு.ராஜேந்திரன் ஆகியோர் பெயரில் பட்டா எண்.1411ல் சர்வே எண். 142/2ல் 1 ஏக்கர் 58 செண்ட் நிலம் உள்ளதாகவும், அதனை சரியாக அளவீடு செய்து உங்களது அப்பா

மற்றும் சித்தப்பா பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்கு லஞ்சமாக ரூ.10,000/-ம் சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்கள் கேட்பதாக சர்வேயரின் உதவியாளா திரு.யுவா அவர்கள் தெரிவித்தார். அப்போது நான் இந்தப்பணம் கவர்மென்ட்க்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் நிலத்தினை அளந்து முறையாக கற்களை நட்டு பட்டா மாறுதல் செய்து தருவதற்கு சர்வேயருக்கு கொடுக்கவேண்டிய பணம் என்று தெரிவித்தார். நான் அவரிடம் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, ஏற்பாடு செய்து தருவதாக கூறினேன். சர்வேயர் லஞ்சமாக பணம் ரூ.10,000/-ம் கேட்டார் என்பதை என்னுடைய அப்பா, அம்மா மற்றும் சித்தி ஆகியோர்களிடம் அப்போதே நான் தெரிவித்தேன். எனது வீட்டிற்கு அருகே கரிக்காலி கிராம நிர்வாக அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.சுதா அவர்களின் அம்மாவின் வீடு உள்ளது. அந்த வீட்டில் தற்போது திருமதி.சுதா குடியிருந்து வருகின்றார். எனவே கடந்த 17.08.2024 ம் தேதி கரிக்காலி கிராம நிர்வாக அலுவலரின் தற்காலிக உதவியாளர் திருமதி.சுதா அவர்களின் வீட்டிற்கு சென்று எனது பட்டா எப்போது கிடைக்கும் எனக் கேட்டேன். அதற்கு அவர் சர்வேயர் கேட்ட பணம் ரூ.10,000/-த்தை கொடுத்தால்தான் பட்டா மாறுதல் செய்து கொடுக்க முடியும் எனக் கூறினார். மேலும் திருமதி.சுதா அவர்கள் சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்களை அவரது செல்போனில் தொடர்புகொண்டு எனது பட்டா மாறுதல் தொடர்பாக பேசினார். அப்போது சர்வேயர் அவர்கள் நான் கேட்ட பணத்தினை கொடுத்தால்தான், சரியாக அளந்து கொடுத்து பட்டா மாறுதல் செய்ய ஏற்பாடு செய்வதாகவும், பணம் தரவில்லையென்றால் பட்டா மாறுதல் விண்ணப்பத்தினை நிராகரித்து விடுவதாகவும் தெரிவித்தாக என்னிடம் திருமதி.சுதா அவர்கள் கூறினார். நான் பணம் எதுவும் இல்லை என்பதால் ஒன்றும் சொல்லாமல் திரும்ப வந்துவிட்டேன். பின்னர் கடந்த 22.08.2024ம் தேதி காலை சுமார் 7 மணிக்கு திருமதி.சுதா எனது வீட்டிற்கு வந்து சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்கள் கேட்ட பணம் ரூ.10,000/-த்தை வாங்கி வருமாறு கூறியதாக என்னிடம் தெரிவித்தார். நான் அதற்கு தற்போது என்னிடம் பணம் இல்லை எனவும், ஏற்பாடு செய்து தருவதாக கூறினேன். பின்பு அன்றைய தினமே சுமார் 12.58 மணிக்கு சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்கள் அவரது அலைபேசி எண்.9363925760லிருந்து எனது அலைபேசி எண்-8438881768க்கு தொடர்பு கொண்டார். அப்போது நான் வேலையாக இருந்ததால் அழைப்பினை எடுக்க இயலவில்லை. அதன் பின்பு நான் சுமார் 12.59 மணிக்கு அவரை அலைபேசியில் தொடர்பு கொண்டேன். அப்போது சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்கள் என்னை குஜிலியம்பாறை தாலுகா அலுவலத்திற்கு வந்து அவரை சந்திக்குமாறு கூறினார். அதன் பேரில் நான் மதியம் சுமார் 1.45 மணிக்கு குஜிலியம்பாறை தாலுகா அலுவலத்தில் உள்ள நில அளவைப்

பிரிவிற்கு சென்று சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்களை சந்தித்தேன். அப்போது சர்வேயர் என்னிடம் நிலத்தினை முறையாக அளந்து, உங்களது அப்பா மற்றும் சித்தப்பா பெயரில் பட்டா மாறுதல் செய்து தருவதற்கு ஏற்கனவே கேட்ட பணம் ரூ.10,000/-த்தை கொடுக்குமாறும், இல்லாவிட்டால் விண்ணப்பத்தினை நிராகரித்து விடுவதாகவும் தெரிவித்தார். நான் தற்போது பணம் எதுவும் என்னிடம் இல்லை, ஏற்பாடு செய்துவிட்டு வருவதாக கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் 25.08.2024ம் தேதி காலை சுமார் 07.07 மணிக்கு சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்களின் அலைபேசியில் தொடர்பு கொண்டேன். அப்போது அவரது மனைவி அலைபேசியினை எடுத்து அவர் வந்தவுடன் கூப்பிட சொல்வதாக கூறிவிட்டார். ஆனால் சர்வேயர் என்னிடம் தொடர்பு கொள்ளவில்லை. பின்பு 27.08.2024ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு கரிக்காலி கிராம நிர்வாக அலுவலகத்தின் வழியாக நான் எனது குழந்தை படிக்கும் கம்பன் பள்ளிக்கு சாப்பாடு கொடுக்க சென்றபோது, சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்கள் கரிக்காலி கிராம நிர்வாக அலுவலகத்தில் அமர்ந்திருந்தார். அப்போது அவரை சந்தித்து எனது பட்டா மாறுதல் தொடர்பாக கேட்டேன். அப்போது சர்வேயர் என்னிடம் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.10,000/-ம் எப்போது தருவீர்கள் எனக் கேட்டார். அதற்கு நான் என்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை என்று தெரிவித்து வந்துவிட்டேன். பின்னர் அன்றைய தினமே சுமார் 16.16 மணிக்கு சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்களை எனது அலைபேசியில் தொடர்பு கொண்டு என்னால் நீங்கள் கேட்ட பணம் ரூ.10,000/-த்தை தர இயலாது எனவும், குறைத்து கொள்ளுமாறும் தெரிவித்தேன். அதற்கு சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்கள் பட்டா தருவதற்கான பணிகள் முடிவடைந்துவிட்டதாகவும், பணத்தை கொடுத்தால் உடனடியாக ஆன் லைனில் பதிவேற்றம் செய்து விடுவதாகவும் தெரிவித்தார். பின்னர் 03.09.2024ம் தேதியன்று சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்கள் அவரது அலைபேசி எண்.9363925760லிருந்து எனது அலைபேசி எண்-8438881768க்கு தொடர்பு கொண்டு என்னை குஜிலியம்பாறை தாலுகா அலுவலகத்திற்கு வரச்சொன்னார். நான் குஜிலியம்பாறை தாலுகா அலுவலகத்திற்கு சென்று சர்வேயர் திரு.பாரதிதாசன் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் உங்களது மனுவின் பேரில் பட்டா மாறுதல் செய்து விட்டதாகவும், ஆன்லைனில் எடுத்துக்கொள்ளுமாறும் தெரிவித்தார். மேலும் கரிக்காலி கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் திருமதி.சுதா அவர்களிடம் நான் கேட்ட பணம் ரூ.10,000/-த்தை கொடுத்துவிடுமாறு மெதுவாக கூறினார். அப்போது நான் அவரிடம், அவ்வளவு பணம் என்னால் கொடுக்க இயலாது எனவும், கொஞ்சம் குறைத்துக் கொள்ளுமாறும் கூறினேன். அதற்கு அவர் ரூ.3,000/-த்தை குறைத்து கொண்டு

ரூ.7,000/-த்தை கரிக்காலி கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் திருமதி.சுதாவிடம் கொடுத்துவிட்டு பணத்தை திருமதி.சுதா அவர்கள் பெற்றுக்கொண்ட பின்பு திருமதி.சுதா அவர்களை அவாது அலைபேசியிலிருந்து தொடர்பு கொண்டு தகவல் அவருக்கு தெரிவிக்குமாறும் அறிவுறுத்தினார். நானும் சரி என்று சொல்லி விட்டு வந்து விட்டேன். பின்பு யோசனை செய்ததில் பட்டா மாறுதல் செய்து தந்ததற்காக சர்வேயருக்கு லஞ்சமாக பணம் ரூ.7,000/-த்தை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் பட்டா மாறுதல் செய்ததற்காக ரூ.7,000/-ம் லஞ்சமாக கேட்டும், அதனை கரிக்காலி கிராம நிர்வாக அலுவலக உதவியாளராக பணிபுரியும் திருமதி.சுதா அவர்களிடம் கொடுக்குமாறும் தெரிவித்த கரிக்காலி சர்வேயர் திரு.பாரதிதாசன அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாருடன் நான் இ சேவை மையத்தில் எனது அப்பா திரு.கள்ளைய கோனார் அவர்கள் பெயரில் 24.07.2024 அன்று பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பம் செய்த ஆன்லைன் விண்ணப்ப எண். 2024/0105/13/425445ன் நகல் மற்றும் எனது சித்தப்பா திரு.துரைசாமி அவர்கள் பெயரில் 24.07.2024 அன்று பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பம் செய்த ஆன்லைன் விண்ணப்ப எண்.2024/0105/13/425453ன் நகல் ஆகியவற்றினை இணைத்துள்ளேன். மேலும் கரிக்காலி சர்வேயர் லஞ்சமாக என்னிடம் கேட்ட பணம் ரூ.7,000/-ம் கொண்டு வந்துள்ளேன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (K.Saranya, 04.09.2024)

Sir, Received the complaint on 04.09.2024 at 10.00 Hrs and made a confidential verification on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complaiant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC Cr.No.05/2024, u/s. 7(b) and 12 of Prevention of Corruption Act 1988, as amended in 2018 was registered today at 12.30hrs. The Original FIR along with written complaint was sent to the Hon'ble Court of Special Judge/Chief Judicial Magistrate, Dindigul and remaining copies were sent to the officers concerned.

(P.Palanisamy), 04/08/24
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul